டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.10.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 094 - Madurai | Online Edition

# தில்லியில் கிலோ தக்காளி ரூ.65க்கு விற்பனை செய்ய நடவடிக்கை

புது தில்லி, அக்.7

அதிகரித்து வரும் தக்காளி விலையைக் குறைக்கும் முயற்சியில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் நிதி கரே நேற்று புதுதில்லியில் தக்காளி கிலோ ரூ.65 க்கு விற்கும் இந்திய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பின் வேன்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



மண்டிகளிலிருந்து தக்காளியை நேரடியாகக் கொள்முதல் செய்து கிலோ ரூ.65 என்ற மானிய விலையில் விற்பனை செய்வதன் மூலம் என்.சி.சி.எஃப் சந்தை தலையீட்டைத் தொடங்கியுள்ளது.

தக்காளி விலையின் சமீபத்திய அதிகரிப்பிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்கும், இடைத்தரகர்களுக்கு அதிர்ஷ்ட ஆதாயங்களைத் தடுப்பதற்கும் இந்தத் தலையீடு உள்ளது. நாடு முழுவதும் உள்ள முக்கிய நகரங்களில் உள்ள சில்லறை நுகர்வோருக்கு அரசு ஒரு கிலோ ரூ.35 க்கு வெங்காயத்தை என்.சி.சி.எஃப் தொடர்ந்து வழங்கி வருகிறது.

மண்டிகளில் நல்ல அளவில் தொடர்ந்து வந்தபோதிலும் தக்காளியின் சில்லறை விலை சமீபத்திய வாரங்களில் தேவை யற்ற அதிகரிப்பைக் கண்டது. ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா போன்ற முக்கிய உற்பத்தி செய்யும் மாநிலங்களில் நீடித்த பருவமழை காரணமாக மழை மற்றும் அதிக ஈரப்பதம் சமீபத்திய வாரங்களில் தரம் குறித்த கவலைகளுக்கு வழிவகுத்ததாகக் கூறப்படுகிறது. இந்த அதிக தேவை பண்டிகை பருவத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

நியாயமான வர்த்தக நடைமுறைகளை ஊக்குவித்தல், விலை நிலைத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கான அதன் உறுதிப்பாட்டை என்சிசிஎப்–ன் தலையீடு நிரூபிக்கிறது. விவசாயி களுடன் நேரடியாக ஈடுபடுவதன் மூலமும், தள்ளுபடி விலையில் தக்காளியை வழங்குவதன் மூலமும், நுகர்வோர் மீது விலை ஏற்ற இறக்கங்களின் தாக்கத்தைத் தணிப்பதில் இந்த அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.

தக்காளி சில்லறை விற்பனை தொடக்க விழாவில் தேசிய கூட்டுறவு நிதியத்தின் இணைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர் அனுபம் மிஸ்ரா, மூத்த பொருளாதார ஆலோசகர் ஐ.எஸ் நேகி மற்றும் பொருளாதார ஆலோசகர் டாக்டர் காம்கெந்தாங் குயிட் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த முயற்சி நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் உள்ள நுகர்வோருக்கு பயனளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது, இந்த அத்தியாவசியப் பொருளுக்கு மிகவும் மலிவு விருப்பத்தை அவர்களுக்கு வழங்குகிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு

திருவண்ணாமலை, அக்,7

தற்பொழுது வடகிழக்கு பருவமழை தொடங்கி அதிக அளவில் பெய்து கொண்டு இருப்பதால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும்.

குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதை களில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகிய வற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ள லாம். திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியனவற்றை பரிசோதனை செய்து அதன் பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றது. விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

பெரம்பலூர், அக்.7

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூரில் இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இப்கோ மாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ் கூறியதாவது, இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டத்தின் மூலம் மாதிரி கிராமங்களில் உள்ள விவசாயிகள் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா திரவ உரங்களை 25% மானிய விலையிலும், ஒரு ஏக்கருக்குரூ. 300 மட்டும் செலுத்தி நானோ உரங்களை இப்கோ கிசான் ட்ரோன் மூலம் தெளித்து பயன்பெறலாம் என விளக்கினார்.

மேலும் அவர் இரசாயன உரங்களின் பயன் பாட்டால் மண் மாசுபடும் மற்றும் மண்வளம் குறையும் என்றும் மண்வளத்தை காக்க நானோ உரங்களை பயன்படுத்தலாம் என்றுதெரி வித்தார்.

மேலும், நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என கூறினார். பின்னர், இப்கோ நிறுவனத்தின் விவசாயிகள் இலவச விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹரன் பீமாயோஜனாவின் மூலம் நானோ உரங்கள் வாங்கினால் ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீடு பெறலாம் என்றார்.



# கடலை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் பண்ணை பள்ளி பயிற்சி



புதுக்கோட்டை, அக்,7

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் வட்டாரம், வேளாண்மை உழவர் நலத்துறை கீழ் செயல்படும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கடலை பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய ஆறு வாரத்துக்கான துவக்க விழா பயிற்சி கத்தக்குறிச்சி மேடு கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு மாவட்ட விவசாய குழு உறுப்பினர் குமரேசன் முன்னிலையில் வம்பன் வேளாண் அறிவியல் நிலைய மண்ணி யியல் துறை இணை பேராசிரியர் முனைவர் பாலமுருகன் தலைமை வகித்து பேசும் போது எண்ணெய் வித்து பயிர்களில் கடலை போன்றவற்றை வேளாண் தொழில்நுட்பங்களை பயன் படுத்தி சாகுபடி செய்வதால் கூடுதல் மகசூல் பெற முடியும் என்றும், அதிக லாபம் பெறலாம் என்றும் அதற்கு அடிப் படையான விவசாயிகள் மண் மாதிரி எடுத்து ஆய்வுக்கு அனுப்பி அதன் அடிப்படையில் உரம் இட வேண்டும் என்றும் விவசாயிகள் நிலக்கடலையில் ஒரு ஏக்கருக்கு 180 கிலோ ஜிப்சம் இடுவதால் அதிக மகசூல் கிடைக்கும் என்றும், மேலும் ஊட்டச்சத்து தெளிக்கும் முறைகளையும் தெளிவாக எடுத்துக் கூறினார். முன்னதாக அட்மா தொழில்நுட்ப மேலாளர் இரா.மகேந்திரன் விவசாயிகளை வரவேற்று பேசி பண்ணைப் பள்ளி நடத்துவதன் நோக்கம் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த முறையில் பயிர் செய்வதால் ஏற்படும் நன்மைகளை எடுத்து கூறினர். இப்பயிற்சியில் துணை வேளாண்மை அலுவலர் ஜெயக்குமார் கலந்து கொண்டு வேளாண்மைத் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை எடுத்து கூறினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட 25 விவசாயிகளுக்கு கடலை சாகுபடி பற்றிய தொழில்நுட்ப கையேடுகளை வம்பன் வேளாண் அறிவியல் நிலையம் இணைப்பேராசிரியர் வழங்கினார். பயிற்சி ஏற்பாடுகளை அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் வி.முருகன், லோ.கவியரசி செய்திருந்தனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 07.10.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 35 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 45 | 57A | உருளை(ஊட்டி) | 70 | 74 |
| 2 | வெண்டை | 30 | 36 | 58 | மேரக்காய் | 20 | 24 |
| 3 | தக்காளி (நாடு) | 45 | 48 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 45 | 48 | 60 | கேரட் | 55 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 45 | 48 |
| 6 | புடலை | 20 | 25 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 24 | 28 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 20 | 24 |
| 9 | பாகற்காய் | 30 | 36 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 26 | 30 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 12 | 16 | 68 | பூண்டு | 260 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 30 | 35 | 69 | இஞ்சி | 50 | 130 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 35 | 40 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 48 | 52 | 71 | பென்னி பீன்ஸ் | 100 | 110 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 45 | 52 | 72 | குடமிளகாய் | 50 | 56 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 34 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 46 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 60 | 68 | 71A | | | |
| 20 | தேங்காய் | 50 | 54 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 120 | 130 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 130 | 200 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 70 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 45 | 55 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 16 | 20 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 36 | | | | |

# மொடக்குறிச்சி வட்டார விவசாயிகளுக்கு நீடித்த நிலையான செம்மை கரும்பு சாகுபடி பயிற்சி



ஈரோடு, அக்.7

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் நீடித்த நிலையான செம்மை கரும்பு சாகுபடி தொடர்பான பயிற்சி 24,வேலம் பாளையம் கிராமத்தில் நடைபெற்றது.

சா.கலைச்செல்வி, வேளாண்மை உதவி இயக்குநர் மொடக்குறிச்சி பயிற்சிக்கு தலைமை தாங்கினார். வேளாண்மை – உழவர் நலத்துறை மானிய திட்டங்கள் குறித்து விளக்கினார். போஜராஜ், உதவி பேராசிரியர், கரும்பு பயிரில் செம்மை கரும்பு சாகுபடி மற்றும் புதிய இரகங்களை தேர்வு செய்து அதனை பயிரிட்டு அதிக மகசூல் பெறுதல் மற்றும் பூச்சி நோய் கட்டுப்பாடு பற்றி விவசாயிகளுக்கு விரிவாக பயிற்சி அளித்தார்.

செந்தில், கரும்பு அலுவலர் ஈ.ஐ.டி பாரி சக்கரை ஆலை, அரச்சலூர், கரும்பு பதிவு முறைகள், ஆலையில் இருந்து வழங்கப்படும் மானியங்கள், இயந்திர அறுவடை மற்றும் கரும்பு நுண்ணூட்ட பயன்பாடு குறித்தும் விவசாயி களிடம் எடுத்துரைத்தார்.

பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி செம்மை கரும்பு சாகுபடியின் முக்கியத்துவம் உர மேலான்மை குறித்து விவசாயிகளிடம் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் த.விஜயகுமார், உழவன் செயலி பதிவேற்றம் குறித்தும், பொ.லட்சுமி, இ நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளிடம் விளக்கினார்கள்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஈ.ஐ.டி பாரி சக்கரை ஆலை கரும்பு ஆய்வாளர்கள் செய்திருந்தனர். மேலும் நடப்பிலுள்ள புதிய ரகங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் கரும்பு வளர்ச்சி ஊக்கிகள், உயிர் உரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# தொருவளூர் கிராமத்தில் மண்வள அட்டை விழிப்புணர்வு முகாம்

இராமநாதபுரம், அக்.7

இராமநாதபுரம் வட்டாரம், தொருவளூர் கிராமத்தில், முன்னேற விழையும் மாவட்ட திட்டத்தின் கீழ் மண் வள அட்டை விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

முன்னேற விழையும் மாவட்ட திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் வட்டாரம், தொருவளூர் கிராமத்தில் மண் வள அட்டை விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் (பொ) முருகேசன்,வேளாண்மை துணை இயக்குநர் (மா.தி) அமர்லால், இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.கோபால கிருஷ்ணன், உயிர் உரம் உற்பத்தி மையம் வேளாண்மை அலுவலர் அம்பேத்குமார், மண் பரிசோதனை நிலையம், வேளாண்மை அலுவலர் ஆர்த்தி, இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் தமிழ், உதவி வேளாண்மை அலுவலர் குணசேகரன், தொருவளூர் பஞ்சாயத்து தலைவர் பக்ருதீன் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். மண் மாதிரி எடுக்கும் முறைகள், மண்வள அட்டையின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தனர்.

மண்வள அட்டைகளை வேளாண்மை இணை இயக்குநர் மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் ஆகியோர் விவசாயி களுக்கு வழங்கினர். மண் வளம், மண் மாதிரி அட்டையின் முக்கியத்துவம் குறித்து உறுதி மொழியினை விவசாயிகள் எடுத்துக் கொண்டனர். மண் ஆய்வு முடிவுகள் மண் வள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. மண் ஆய்வு முடிவுகளின்படி, பயிருக்கு தேவையான உரங்களை இடுவதன் மூலம் உரச் செல வினை குறைத்து அதிக மகசூல் பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் தெரிவித்தார். முகாமில் விதை நேர்த்தி முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விருதுநகர் மாவட்ட விவசாயிகளுக்கு மக்காசோள சாகுபடி குறித்த ஆடியோ கான்ஃபரன்ஸ் பயிற்சி

விருதுநகர், அக்.7

தற்போது கடந்த சில நாட்களாக விருதுநகர் மாவட்டத்தில் ஆங்காங்கு பருவமழை பெய்து வருகின்றன. இதைப் பயன் படுத்தி ஒரு சில இடங்களில் மக்காசோளம் விதைப்பு மற்றும் இறவையில் 15 நாள் பயிராக உள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் என்னனென்ன சாகு படி தொழில் நுட்பங்களை கடைபிடிக்கலாம் என்பதை ரிலையன்ஸ்



டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு 5.10.24 அன்று அலைபேசி வாயிலாக கலந்துரையாடல் & பயிற்சி (AUDIA - CONFERENCE) நடைபெற்றது. இந்த பயிற்சியை துவக்கி வைத்த திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா தனது உரையில், மழையை எதிர்பார்த்து வந்த நிலையில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. மேலும் மழையின் தாக்கம் இந்த மாதம் 16 தேதி வரை நிடிக்கும் என்றார். மக்காசோள சாகுபடியின் தேவை நாளுக்கு நாள் அதிகரிக்க தொடங்கியதாகவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தொழில்நுட்ப கருத்துகளை வழங்கிய வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் கூறுகையில், மக்காசோள சாகுபடி மற்ற பயிர் சாகுபடியை விட (நெல், பருத்தி, வாழை) மிகவும் எளிதான தாகவும் விதைப்பு முதல் அறுவடை வரை முழுக்க முழுக்க இயந் திரங்களில் உதவியால் செய்ய முடியும் என்றார். இதில் இரண்டு முக்கிய எதிரியாக மக்காசோள சாகுபடியில் உள்ளது 1) படைப்புழு 2) காட்டுபன்றி என்றார். இவைகளை ஒருங்கிணைந்த முறையில்

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800 Reliance Foundation

கட்டுப்படுத்திட வேண்டும். இதை கட்டுப்படுத்தி விட்டால் மக்காசோள சாகுபடியில் நாம் எதிர்பார்த்த மகசூலை விட கூடுதலாக மகசூல் பெறலாம் என்றும் கட்டுபடுத்தபடும் முறைகளை விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் சாகுபடி சம்மந்தப்பட்ட சந்தேகங்களுக்கு கட்டண மில்லாத அலைபேசி (1800 419 8800) வாயிலாக தொடர்பு கொள்ளுங்கள் என்றார். இது C4 PLANT வகையை சேர்ந்தது. மித வெப்ப மண்டல பயிர். எனவே நம்முடைய தட்பவெப்ப சூழ்நிலையில் நன்றாக வளரக்கூடியது. தற்போது முளைத்து வரும் செடிகளை அணில், முயல்கள் கத்தரித்து வருவதாக விவசாயிகள் ஆடியோ கான் பிரன்ஸ்யில் தெரிவித்தனர். அதற்கு சாணக்கரைசல் வரப்பு ஓரங் களில் கோமியம் கலந்து தெளித்தால் அந்த துர்நாற்ற வாடைக்கு வாரது என்றார். மேலும் (HERBOLIVE REPELLANT) வாங்கி தெளிக்க கூறினார். இந்த நிகழ்வில் டிஜிட்டல் பண்ணை பள்ளியை சேர்ந்த முன்னோடி விவசாயிகள் குறிப்பாக விருதுநகர், அருப்புக்கோட்டை, ம.ரெட்டியாபட்டி, சாத்தூர், வத்ராப், சிவகாசி, திருவில்லிபுத்தூர், இராஜபாளையம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை களபணியாளர் வேம்புலு சிறப்பாக செய்திருந்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# மக்காசோள சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள்



தானியங்களின் அரசி மக்கா சோளம் தான். உலக அளவில் கோதுமை, நெல் பயிருக்கு அடுத்தபடியாக சாகுபடி செய்யப் படுவது மக்காசோளம். மற்ற பயிர்களை சாகுபடி செய்வதை, காட்டிலும் மக்காசோள சாகுபடி முழுக்க முழுக்க இயந்திரங்கள் உதவியுடன், சாகுபடி செய்யப் படுகிறது. இதனுடைய தாயகம் மத்திய அமெரிக்கா. இந்தியாவில் 17ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது. இது வெப்ப மண்டல பயிர்.

தமிழகத்தில் 3.5 லட்சம் ஹெக்டேரில் இறவையாகவும், மானாவாரியாகவும் பயிரிடப்படுகிறது. இது பெரும்பாலும் வீரிய ஓட்டு ரகங்கள் தான் சாகுபடி செய்யப்படுகிறது. வீரிய ஓட்டு ரகங்கள் எகப்பட்ட இரகங்கள் இருந்தாலும் NK6540, NK 7328, அட்லாண்டா 751 எலைட், மைக்கோ 4060, ராசி, மகாராஜா, காவேரி பயோனிர் போன்ற இரங்கள் இறவை மற்றும் மானாவாரிக்கேற்றது.

விதையளவு - ஏக்கருக்கு 6-8 கிலோ.

விதை நேர்த்தி மக்காசோள படைப்புழு தாக்குதலை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் பேவேரியா பேசியானா கலந்து விதைக்க வேண்டும்.

இடைவெளி 60X30 செ.மீ

**நடவு வயல் தயாரிப்பு**

நன்றாக உழுது கட்டிகள் இல்லாத நிலையில் மக்கிய சாண குப்பைகளை இட்டு, விதை விதைக்கும் கருவி கொண்டு விதைக்க வேண்டும். அடியுரமாக எக்கருக்கு NPK 60:26:20 என்ற அளவில் இடவும். அத்துடன் ஏக்கருக்கு 5 கிலோ M.N MIXTURE FOR MAIZE) இடவேண்டும். மேலுரமாக மக்கா சோளத்தில் 6வது கணுக்கள் வந்த நாளிலும் (25-35) இரண்டாவது மேலுரமாக 9வது கணுக்கள் வந்த நாளிலும் இடவேண்டும்.

மக்காசோளத்தில் அதிகமாக மகசூல் பெற TNAU MAIZE-MAXIAM என்ற பயிர் ஊக்கி 3 கிலோவை ஆண் மஞ்சரி உருவாக்கும் போதும் மணி உருவாகும் தருணத்திலும் தெளிக்க வேண்டும்.

மக்காசோள சாகுபடிக்கு 600-700 MM மழை அளவு இருந்தாலும் போதுமானது. இது C4PLANT வகையை சார்ந்தாலும் அதிகளவாக ஒளிச்சேர்க்கை நடைபெற்று மகசூலை அள்ளி தருகிறது.

அத்துடன் மட்டுமல்லாது அதனுடைய வேரில் வேம் உற்பத்தியாவதால் மக்காசோள பயிருக்கு அடுத்த படியாக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டால் கூடுதலான நிலக்கடலை மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தரவுகள் தெரிக்கின்றன.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# வறட்சியை சமாளிக்கும் முறைகள்

வறட்சி என்பது தாவர வளர்ச்சியை பாதிக்கும் அளவுக்கு கடுமையான நீர் பற்றாக்குறை என வரையறுக்கப்படுகிறது. வறட்சி, மண் வறட்சி மற்றும் வளிமண்டல வறட்சி என இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மண் வறட்சி, வளிமண்டல வறட்சிக்கு வழிவகுக்கிறது. குறைந்த வளிமண்டல ஈரப்பதம், அதிக காற்றின் வேகம் மற்றும் அதிக வெப்பநிலை காரணமாக வளிமண்டல வறட்சி ஏற்படுகிறது. இது தாவரத்தின் பெரும்பாலான தண்ணீரை இழக்க காரணமாகிறது.

**வறட்சியை சமாளிக்கும் முறைகள்**

**1. பயிர் மற்றும் வகைகள் தேர்வு**

பயிர்கள் மற்றும் ரகங்களைத் தேர்ந்தெடுப்பது ஈரப்பதத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். உதாரணமாக, ஈரப்பதம் குறைவாக இருக்கும் போது, குறைந்த தண்ணீர் தேவைப்படும் பயிர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். (எ.கா. தினை) மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட ரகம் வறட்சியைத் தாங்கக்கூடியதாகவும், குறுகிய காலத்தைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

**2. விதைக்கும் நேரம்**

வறட்சி தொடங்குவதற்கு முன்பே பயிர் அதன் வாழ்நாள் சுழற்சியை நிறைவு செய்யும் வகையில் விதைப்பு நேரம் இருக்க வேண்டும்.

**3. விதை கடினப்படுத்துதல்**

விதை கடினப்படுத்துதல் என்பது வறட்சி மற்றும் குளிர் போன்ற பாதகமான சுற்றுச்சூழல் நிலைமைகளை பொறுத்துக்கொள்ள விதைகளை ஈரமாக்குதல் மற்றும் உலர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு செயல்முறையாகும். KCl, KH2PO4 CaCl2 ஆகியவை பொதுவாக விதை கடினப்படுத்தலுக்குப் பயன் படுத்தப் குபடுகின்றன.

**4. தழைக்கூளம் (Mulching)**

தழைக்கூளம் என்பது இலைகள், கிளைகள், வைக்கோல் போன்ற தாவரப் பொருட்களால் மேல் மண்ணை மூடும் செயல் முறையாகும்.

தழைக்கூளம் மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல், நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தத்திலிருந்து தாவரங்களைப் பாது காப்பதன் மூலம் வறட்சியைத் தணிக்க உதவும்.

**5. ஆண்டிட்ரான்ஸ் பிரண்ட்ஸ் (Antitranspirants)**

இது தாவரங்களின் இலைகளில் நீராவிப்போக்கை குறைக்கப் பயன்படுத்தப்படுகிறது. (எ.கா.கயோலின், மெழுகுகள் மற்றும் சிலிகான்). இதை இலைகளில் தெளிப்பதால் பயிரானது வறட்சியை தாங்கி வளரும் மற்றும் பயிர் விளைச்சலை அதிகரிக்க உதவும்.

Source : **A.Priya Dharshini, Assistant Professor (Crop Physiology), Krishna College of Agriculture and Techno logy, Srirengapuram - 625 532, Usilampatti, Madurai.**

# கொடுமுடி வட்டாரத்தில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி



ஈரோடு, அக்.7

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரத்தில் வேளாண்மை – உழவர் நலத்துறையின், கீழ் செயல்படும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை மூலம் வடக்குப் புதுப்பாளையம் வருவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு நீடித்த நிலையான கரும்பு சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பொறுப்பு மு.ரேகா, தலைமை தாங்கி துவங்கி வைத்தார். பின்னர் ஜெயகுமார், பூச்சியல் துறை ஈ.ஜ.டி பாரி, கரும்பு பயிரில் பூச்சி மேலாண்மை மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறை பற்றி விவசாயிகளிடம் தெளிவாக விளக்கி கூறினார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் மாதவன், வேளாண் இடுபொருள் களான உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டங்களின் மானிய விவரங்களையும் தனது துறை சார்ந்த திட்டங்களை எடுத்து கூறினார். இந்த பயிற்சிக்கான ஏற்பாடுகளை யுவராஜ், ஈ.ஜ.டி பாரி அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சிதம்பரம் மற்றும் மஞ்சுரேகா செய்திருந்தனர்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# தரமான விதை சேமிப்பிற்கு ஈரப்பதம் பரிசோதனை செய்வீர்!

வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் விதைகளின் பங்கு இன்றியமையாததாகிறது. வித்தே விளைவின் ஆதாரம், விதைபாதி, வேலைபாதி, சொத்தைபோல் வித்தை பேண வேண்டும் ஆகிய பழமொழிகள் தரமான விதை உற்பத்தி மற்றும் விதை சேமிப்பின் அவசியத்தை உரைக்கின்றன.

விதைகளை சேமிக்கும் போது அதன் ஈரப்பதம் மிகவும் முக்கியம். விதையில் ஈரப்பதம் இருப்பதை பொருத்தே விதைக் குவியலின் ஆயுள் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒரு விதையின் ஈரப்பதம் அதிகமாகவோ அல்லது மிகவும் குறைவாகவோ இருக்க கூடாது. சரியான ஈரப்பத நிலையில் உள்ள விதைகள் பூச்சி மற்றும் பூஞ்சான தாக்குதல் இன்றி நீண்ட நாட்கள் சேமித்து வைக்க முடியும். ஒவ்வொரு பயிருக்கும் ஈரப்பத சதவீதம் மாறுபடும். நெல் அதிகபட்ச ஈரப்பதம் 13 சதவீதம், மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகிற்கு அதிகபட்ச ஈரப்பதம் 12 சதவீதம், உளுந்து, பாசிப்பயிறு, தட்டைப்பயிறு, துவரை, சூரியகாந்தி, கொண்டைக்கடலை, எள், கொத்தவரை, முருங்கை பயிர்களின் விதைக்கு 9 சதவீதமும் இருக்க வேண்டும். பருத்தி, வெண்டை, பயிர்களின் விதைகளுக்கு 10 சதவீத ஈரப்பதமும், கொடிவகை காய்கறி பயிர்களான பாகல், புடலை, பிர்க்கன், பூசணி, தர்பூசணி, பரங்கி விதைகளுக்கு 7 சதவித ஈரப்பதமும் இருக்க வேண்டும். மேலும் கத்தரி, மிளகாய், தக்காளி, வெங்காயம், கேரட் மற்றும் கீரை வகை விதைகளுக்கு 8 சதவீதமும் ஈரப்பதம் இருக்க வேண்டும்.

தற்போது குறுவை பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்பட்ட இரகங்களான ஆடுதுறை-43, ஆடுதுறை-45, ஏ.எஸ்.டி-16, கோ-51, ஆடுதுறை-53, டி.பி.எடு;-5 ஆகிய வற்றில் விவசாயிகள் விதைகளுக்காக காய வைத்து, சேமித்து வைத்து கொள்வார்கள். அவ்வாறு சேமித்து வைத்துள்ள விதைகளில் ஈரப்பதம், புறத்தூய்மை பரிசோதனை, முளைப்புத் திறன் பரிசோதனை செய்து அதற்கேற்றவாறு விதை சேமிப்பு முறைகளில் கவனம் செலுத்துவது அவசியம்.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தியாளர்கள், விதை விநியோகம் செய்பவர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் விதையின் ஈரப்பதம் பரிசோதனை மேற் கொள்ள ரூ.80/- (ரூபாய் எண்பது மட்டும்) கட்டணத்துடன் விதை பரிசோதனை நிலையம், பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் அணுகி பயன்பெற அழைக்கப்படு கிறார்கள்.

மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் சே.சிவசக்தி ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.



# உலக பருத்தி தினத்தினை முன்னிட்டு பருத்தியில் அதிக மகசூல் பெற விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, அக்.7

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி, சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக அக்டோபர் மாதம் ஏழாம் தேதி திங்கட் கிழமை உலக பருத்தி தினத்தை முன்னிட்டு பருத்தியில் அதிக மகசூல் பெற, பூக்கள் மற்றும் சப்பைகள் உதிர்வதை காய்கள் முழுமையாக வெடித்து சீரான அறுவடைக்கு வழிவகுக்கும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பருத்தி பிளஸ் (பருத்திக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சிக்குகள் கலந்த பூஸ்டர்) விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இன்று முசிறி வட்டாரம் திருத்தலையூர் கிராமத்திலும், தொட்டியம் வட்டாரம் எம் களத்தூர் கிராமத்திலும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. எனவே பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு சிறுகமணி வேளாண் அறிவிப்பில் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

**பருத்தி பிளஸ்** (பருத்திக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர்)

**பயன்கள்**

1. பூ மற்றும் சப்பைகள் உதிர்வது குறையும்

2. காய்கள் முழுமையாக வெடித்து, சீரான அறுவடைக்கு வழிவகுக்கிறது

3. விளைச்சல் 18 சதம் வரை அதிகரிக்கும்

4. வறட்சியைத் தாங்கும் தன்மை அதிகரிக்கும்

**பயன்படுத்தும் முறை**

**அளவு :** ஏக்கருக்கு 2.5 கிலோ

**தெளிப்பு திரவம் :** 200 லிட்டர்

**தெளிக்கும் பருவம் :** பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் பருவம் தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்க்கவும்.

மேலும் விவரங்களுக்கு 0431 2962854, 91717 17832, 88381 26730 என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும். மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்சி.ராஜாபாபு தெரிவிக்கிறார்.




# மண் புழு உரத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்த வேளாண் துறை மாணவர்கள்

விருதுநகர், அக்.7

கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை துறை மாணவர்கள் ராஜதுரை, சஞ்சய், சந்தோஷ் குமார், சம்பு நாத்து, கேஸ்ட்ரோ, ஹரிஷ், தர்சன் மற்றும் மணிகண்டன் ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் வத்திராயிருப்பு வேளாண் உதவி இயக்குநர், பாட ஆசிரியர் முனைவர் ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் கங்காதரன் அவர்களின் அறிவுரையின்படி விருதுநகர் மாவட்டம், சுந்தரபாண்டியம் சுற்றி உள்ள கிராம விவசாயி களுக்கு விழிப்புணர்வும், ஆலோசனையும் ஏற்படுத்தி வருன்றனர்.



7/10/24 அன்று வட்டார தொழில்நுட்ப மேலாளர் நாராயணன், தலைமையில் இம்மாணவர்கள் மண் புழு உரத்தின் முக்கியத்துவத்தையும் செயல் முறை விளக்கத்தையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

Stanes




பயோ நெமட்டான்

பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?

பயன்படுத்துவீர்...

# பயோ நெமட்டான்

## "நூற்புழுக்களின் எதிரி"

இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.

- அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
- பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
- மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.

வேர் முடிச்சுகள்



வேர் வீக்கம்



வேர் அழுகல்



டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com

84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948 திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935 வேலூர் : 91 93449 14938

# நெல்லில் இலை சுருட்டுப்புழு தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள்

**தாக்குதலின் அறிகுறிகள்**

● இலைகள் நீள் வாக்கில் மடிக்கப்பட்டிருக்கும். புழுக்கள் அதனுள்ளே இருக்கும்.

● புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும்.

● தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும்.

**கட்டுப்படுத்தும் முறை**

பொருளாதார சேத நிலை அளவு : பயிர் வளர்ச்சிப் பருவத்தில் 10 சதவிகிதம் இலைச்சேதம் மற்றும் பூக்கும் பருவத்தில் 5 சதவிகிதம் கண்ணாடி இலைச் சேதம்.

● டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணிகளை) பயிர் நடவு செய்து 37, 44, மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை ÷ 2 சிசி (40,000 முட்டை ஒட்டுண்ணிகள்/ஏக்கர்/முறை) என்ற அளவில் விட வேண்டும்.

● தேவைக்கு அதிகமாக தொழு உரங்கள் இடுவதை தவிர்க்கவும் வரப்புகளை சீராக்கி அதனை சுத்தமாக வைத்தல் மற்றும் புல் இனக் களைகளை நீக்க வேண்டும்.

● தேவைக்கு அதிகமாக தழைச் சத்து இடுவதை தவிர்க்கவும். இடும் தழைச் சத்தினைப் பிரித்து கொடுக்க வேண்டும்.

● வேப்பங்கொட்டைச் சாறு 5 சதவிகிதம் @ 10 கிலோ/ ஏக்கர் (அல்லது) வேப்பெண்ணை 3 சதவிகிதம் @ 6 லிட்டர்/ ஏக்கர் (அல்லது) இலுப்பை எண்ணெய் 6 சதவிகிதம் @ 12 லிட்டர்/ ஏக்கர் (அல்லது) பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் வார் குர்ஸ்டாகி 0.6 கிலோ/ஏக்கர் அல்லது பிவேரியா பாசியானா 1.15 % WP 1 கிலோ / ஏக்கர் அல்லது அசாடி ராக்டின் (0.03%) 400 மி.லி/ ஏக்கர் அல்லது கார்போசல்பான் (6% G) 6.7 கிலோ / ஏக்கர் அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (50% SP) 400 கிராம் / ஏக்கர் (அல்லது குளோரோட்ரேனிலிபுருள் (18.5% SC) 60 கிராம் / ஏக்கர் (அல்லது குளோரோட்ரேனிலிபுருள் (0.4% G) 4 கிலோ / ஏக்கர் அல்லது பிப்ரோனில் (80% WG) 20 கிராம்/ ஏக்கர் (அல்லது புளுபெண்டிமைட் (39.35% SC) 20 கிராம்/ ஏக்கர் அல்லது புளுபெண்டிமைட் (20% WG) 50 கிராம் / ஏக்கருக்கு பயன்படுத்தி பயன் பெறலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டு கொண்டுள்ளார்.

# பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி வேளாண் துறை அறிவிப்பு

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பருத்தி பயிரானது விவசாயி களால் பயிரிடப்படும் முக்கிய பயிராகும். பருத்தியின் தேவையை ஈடுகட்டவும், பெருகிவரும் சாகுபடிச் செலவு போன்ற இடர்பாடு களைச் சமாளிக்கவும், பருத்தி உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு




தொழில்நுட்பங்களில் ஊடுபயிர் சாகுபடி முறை முக்கியமான தாகும். இது நன்மைத் தரக்கூடியதாகவும், அதிக வருமானம் தரும் தொழில்நுட்பமாகும். மேலும் பயிர்த்திட்ட அதிகரிக்கவும், இடுபொருட்கள் மற்றும் வளங்களை திறமையாகப் பயன் படுத்தவும் இதுவே மிகச்சிறந்த வழியாகத் திகழ்கிறது. பருத்தியில் ஊடுபயிர் சாகுபடியின் முக்கிய நோக்கம் ஊடுபயிர்களின் மூலம் கூடுதல் விளைச்சலும், அதன் மூலம் வருமானத்தை உயர்த்து வதுமே ஆகும். எனவே விவசாயிகள் பருத்தி சாகுபடியில் அந்தந்தப் பகுதிகளின் மண், காலநிலை, பாசன வசதி மற்றும் விற்பனை வாய்ப்புக்கேற்ப தகுந்த ஊடுபயிர்களைத் தேர்வு செய்து உயர் விளைச்சலும், கூடுதல் வருமானமும் பெறலாம்.

பருத்தியில் ஊடுபயிர் சாகுபடி செய்வதனால் நீர் மற்றும் நில வளங்கள் நன்கு பயன்படுத்தப்படுகின்றன. வேளாண் இடுபொருட் களை திறம்பட பயன்படுவதுடன், பருத்தியில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள் குறைக்கலாம். உளுந்து போன்ற ஊடு பயிர்கள் பருத்தியின் இடைப்பட்ட பகுதிகளை அடைத்து மண்ணை மூடிவிடுவதால், களைகள் வளர்வது கட்டுப்படுத்தப்படுகின்றது. உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயறுவகைப் பயிர்களை பருத்தியில் ஊடுபயிராக சாகுபடி செய்வதால் மண்வளம் பெருகு கின்றது. ஊடுபயிர்களிலிருந்து கூடுதல் விளைச்சல் கிடைப்பதுடன், மொத்த விளைச்சல் மற்றும் நிகர லாபமும் அதிகரிக்கின்றது. ஊடுபயிர்களிலிருந்து கிடைக்கும் வருமானம் தொடர்ந்து பருத்தியின் சாகுபடி செலவுகளை சரிக்கட்ட பயன்படுகின்றது.

விவசாயிகள் உளுந்து அல்லது ஆமணக்கு போன்ற பயறுவகைப் பயிர்களை பருத்தியில் ஊடுபயிராக சாகுபடி செய்வதனை ஊக்குவிக்கும் பொருட்டு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டம் வணிகப்பயிர்கள் கீழ் ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை – பருத்தி மற்றும் பருத்தியில் பயறு வகை பயிர்கள் ஊடுபயிராக செயல்விளக்கம் அமைக்கும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.8000 மதிப்புள்ள பயறு விதைகள், திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் இதர இடுபொருட்கள் அடங்கிய தொகுப்பு மானியமாக வழங்கப்படுகிறது. சாகுபடிக்கு தேவையான விதைகள் மற்றும் இடுபொருட்கள் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திலும் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உழவன் செயலியின் மூலம் பதிவு செய்து திட்ட பயன் பெறலாம். மேலும் வேளாண்துறை திட்டம் சார்ந்த தகவல்களுக்கு அருகில் உள்ள வேளாண்ம விரிவாக்க மையத்தினை அணுகி பயன்பெறுமாறு கள்ளக்குறிச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு வர்த்தக மற்றும் தொழில் சங்கத்தின் வேளாண் கண்காட்சி–2024

தஞ்சாவூர், அக்.7

தஞ்சாவூரில், தமிழ்நாடு வர்த்தக மற்றும் தொழில் சங்கத்தின் வேளாண் கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை தஞ்சை மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார்.

இக்கண்காட்சியில் இப்கோ நானோ யூரியா, நானோ டிஏபி, சாகரிகா, உயிர் உரங்கள், இதர உரங்கள் மற்றும் இப்கோ கிசான் ட்ரோன் காட்சிப்படுத்தப்பட்டது.

இப்கோ கள அலுவலர் எஸ். சரவணன் நானோ யூரியா, நானோ டிஏபி மற்றும் சாகரிகா திரவ உரங்களின் பயன்பாடு மற்றும் நன்மைகளை பற்றி விவசாயிகள் மற்றும் அதிகாரி களுக்கு விளக்கினார்.

நானோ உரங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை, அவை மண் மாசு படுவதைத் தடுக்க உதவுகின்றன. மேலும் நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிப்பதனால் விவசாயிகளுக்கு உரச் செலவு குறைந்து மகசூல் அதிகரிக்கும் என வலியுறுத்தினார். விவசாயிகளுக்கான இப்கோ விபத்துக் காப்பீட்டுத் திட்டமான சங்கடஹரன் பீமாயோஜனா குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 10,000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இப்கோ திரவ உரங்கள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.